# விலைக்குறிப்பீடுகளுக்கான அழைப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## ஊழியர் சேம நிதியம் - 2018

## வழக்கொழிந்த, சேதமடைந்த, நன்னிலைப்படுத்த முடியாத, பழுதுபார்க்க முடியாத மற்றும் மிகைப் பொருட்களினைக் கொள்வனவு செய்து அகற்றல்

1. அலுவலக மேசைகள் (இரும்பு மற்றும் மரம்), அலுமாரிகள், இறாக்கைகள், கதிரைகள் (இரும்பு மற்றும் மரம்) போட்டோ பிரதி இயந்திரங்கள், தொலைநகல் பொறிகள், அச்சுப் பொறிகள், நிலை மின்விசிறிகள், துண்டுகளாக்கிகள், கணிப்பான்கள், தொலைபேசிகள், கணனித்திரை வடிகண்ணாடிகள், உள்ளடக்குகின்ற வழக்கொழிந்த, சேதமடைந்த, நன்னிலைப்படுத்த முடியாத, பழுதுபார்க்க முடியாத மற்றும் மிகையான பொருட்களின் பதினேழு தொகுதி (17) தொகுதிகளைக் கொள்வனவு செய்து அகற்றுவதற்கு மூடப்பட்ட சீலிடப்பட்ட விலைக்குறிப்பீடுகளுக்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.
2. இத்தொகுதிப் பொருட்களில் 8 தொடக்கம் 17 வரையான பொருட்களை, மூத்த உதவிக் கண்காணிப்பாளர், ஊ.சே.நி திணைக்களம், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து (தொலைபேசி 011-2477962 அல்லது 011-2477969) முன்அனுமதியினைப் பெற்று இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியிலும் தொகுதி 01 தொடக்கம் 07 வரை பொருட்களை இல.58 சிறிஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் **2018.03.21** இலிருந்து **2018.03.29** வரையான வங்கி வேலை நாட்களிலும் சனிக்கிழமையும் காலை **9.00 மணி தொடக்கம்** பிற்பகல் **3.00 மணி** வரை பரிசோதனை செய்யலாம்.
3. விலைக்குறிப்பீட்டு ஆவணங்களை இல.13, சேர் பர்ரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு - 01 இல் அமைந்துள்ள லொயிட்ஸ் கட்டிடத்திலுள்ள பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணை கருமபீடத்தில் **2018.03.21** ஆம் திகதியிலிருந்து **2018.03.29** ஆம் திகதி வரை காலை **9.00 மணியிலிருந்து** மாலை **3.00 மணி** வரை வங்கி வேலைநாட்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
4. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களோ அவரது உறவினர்களோ விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டர். கொள்வனவு செய்யக்கூடியவர்களாகவுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் கேள்விப்பத்திரத்தின் இணைப்பில் தரப்பட்டபடி ஒன்று அல்லது பல தொகுதிகளிற்கான விலைகளை குறிப்பீடு செய்யலாம் என்பதுடன் ஒரு கோரலாளர் கேள்விப்பத்திர ஆவணங்களை ஒருதரம் மாத்திரமே சமர்ப்பிக்கலாம்.
5. அனைத்து விலைக்குறிப்பீடுகளுடனும் மீளளிக்கத்தக்க விலைக்குறிப்பீட்டு பிணையமாக, விலைக்குறிப்பீடு திறக்கப்படும் நாளிலிருந்து **60** கலண்டர் நாட்களிற்குச் செல்லுபடியாகக்கூடியவிதத்தில் ஊழிய சேம நிதிய கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கியின் சார்பில் வரையப்பட்ட **ரூ.5,000/-** பெறுமதியான வங்கி வரைவொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
6. விலைக்கோரல்கள் மூடப்பட்டு சீலிடப்பட்ட பாதுகாப்பான கடித உறைகளில் இடப்பட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **“வழக்கொழிந்த, சேதமடைந்த நன்னிலைப்படுத்த முடியாத, பழுதுபார்க்க முடியாத மற்றும் மிகையான பொருட்களினைக் கொள்வனவு செய்து அகற்றுவதற்கான கேள்வி”** எனக் குறிக்கப்பட்டு **2018.04.04** அன்று பி.ப **3.00** மணிக்கு பிந்தாத வகையில் இல.13, சேர் பர்ரோன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு - 01 உள்ள லொயிட்ஸ் கட்டடத்தின் பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணை கருமபீடத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் போடப்படவேண்டும் அல்லது ஊழிய சேம நிதியக் கண்காணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
7. விலைக்குறிப்பீடுகள் **2018.04.04** அன்று பி.ப **3.00** மணிக்கு மூடப்படும் நேரம் முடிவடைந்தவுடன் ஊ.சே.நி திணைக்களம், 12வது மாடி, 5ஆவது கோபுரம் இலங்கை மத்திய வங்கி தலைமைக் கட்டடத்தில் உடனடியாகத் திறக்கப்படும். விலைக்குறிப்பீடுகளைத் திறக்கும்போது விலைக்குறிப்பீட்டாளர்கள் அல்லது அவர்களது ஒப்புதலளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் நடைமுறையிலுள்ள பாதுகாப்பு ஒழுங்குகளுக்கமைவாக பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
8. மேலதிகத் தகவல்களிற்கு, அனைத்து விலைக்குறிப்பீட்டாளர்களும் மூத்த உதவிக் கண்காணிப்பாளர் தொலைபேசி 011-2477962 அல்லது 011 -2477969 இனூடாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கண்காணிப்பாளர் - ஊழியர் சேம நிதியம்**
**இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**
**011-2477962 / 011-2477969 | sepf@cbsl.lk | www.epf.lk**